(ஒன்பதாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

இல. 1(4).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2022 பெப்ரவரி 18 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2022 மார்ச் 08, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

250/2022

கௌரவ ஹேஷா விதானகே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை புகையிரதத் திணைக்களத்திற்கென அங்கீகரிக்கப்பட்ட புகையிரத திருப்பு எந்திரச் சாரதிகளின் எண்ணிக்கை மற்றும் சாரதி உதவியாளர்களின் எண்ணிக்கை;

(ii) இன்றளவில் சேவையாற்றுகின்ற புகையிரத திருப்பு எந்திரச் சாரதிகளின் எண்ணிக்கை மற்றும் சாரதி உதவியாளர்களின் எண்ணிக்கை;

(iii) மேற்படி பதவிகளில் இன்றளவில் காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை;

வெவ்வேறாக எத்தனை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி வெற்றிடங்களை துரிதமாக நிரப்புவதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1313/2022

கௌரவ மொஹமட் முஸம்மில்,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களனி கங்கையை அண்டியதாக அமைந்துள்ள கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அக்கைத்தொழிற்சாலைகளால் வெளியேற்றப்படும் கழிவுநீர், அந்த கங்கையுடன் கலப்பதை அறிவாரா என்பதையும்;

(iii) அந்தக் கழிவுநீர் காரணமாக களனி கங்கையின் நீருக்கு ஏற்படுகின்ற பாதிப்பு குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) கழிவுநீரை களனி கங்கைக்கு வெளிவிடுவதைத் தடுக்க இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1471/2022

கௌரவ ரோஹண பண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுர நகரில் ஓர் ஆயுர்வேத வைத்தியசாலை நிறுவப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மருத்துவ சிகிச்சைகளைப் பெறுவதற்காக பெருந்தொகையானோர் மேற்படி வைத்தியசாலைக்கு தினமும் வருகை தருகின்றனர் என்பதையும்;

(iii) மேற்படி வைத்தியசாலைக்குரிய காணியின் பின்பகுதியை ஒரு சிலர் கம்பி வேலியமைத்து கையகப்படுத்தியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், அது சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# 2022 மார்ச் 09, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

251/2022

கௌரவ ஹேஷா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளுக்கமைவாக வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் சமமாகப் பிரிந்து செல்லக்கூடிய வகையில் தேசிய பாடசாலைகளை அமைப்பதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

571/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்தின், மஹியங்கனை பிரதேச செயலாளர் பிரிவில் நிலக்கடலை பயிர்ச்செய்கை கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள காணியின் அளவு மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) அக்குடும்பங்களுக்காக அரசாங்கத்தினால் வழங்கப்படும் சலுகைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1024/2022

கௌரவ சாந்த பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தேசிய பயிலிளவல் படையணி பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி படையணியின் கீழ் உள்ள அணிப்பிரிவுகளின் எண்ணிக்கை யாது;

(ii) தேசிய பயிலிளவல் படையணிக்காக 2021 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதித் தொகை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தற்போது தேசிய பயிலிளவல் படையணியின் கீழ் காணப்படும் பாடசாலை படைப்பிரிவுகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி படைப்பிரிவுகளின் எண்ணிக்கை தரைப்படை, விமானப்படை, கடற்படை மற்றும் பொலிஸ் என்ற வகையில் வெவ்வேறாக யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) பாடசாலை பயிலிளவல் படையணிகளின் நடவடிக்கைகளை முறைப்படுத்துவதற்கான புதிய நடவடிக்கைகள் பின்பற்றப்படுகின்றனவா;

(ii) தேசிய பயிலிளவல் படையணியின் தலைமை பயிற்சி நிலையமான ரன்டம்பே பயிற்சி நிலையத்தில் காணப்படும் குறைபாடுகளுக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

1314/2022

கௌரவ மொஹமட் முஸம்மில்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொவிட்-19 நோயை ஒழிப்பதற்கு இலங்கையில் தடுப்பூசியேற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) இதுவரை தடுப்பூசியேற்றப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை வழங்கப்பட்ட தடுப்பூசி மருந்தளவுகளின் (டோஸ்களின்) பிரகாரம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி எண்ணிக்கை இலங்கையின் மொத்த சனத்தொகையின் சதவீத அடிப்படையில் எவ்வளவென்பதையும்;

(iv) இலங்கையில் தடுப்பூசியேற்றும் நடவடிக்கைகளுக்கு செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2022 மார்ச் 10, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

8/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்காக புதிய சட்டங்களை விதிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) நீதி அமைச்சர் இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடலொன்றை சிங்கப்பூர் அரசாங்கத்துடன் நடத்தியுள்ளார் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) சமூக ஊடகங்கள் பற்றிய அரசாங்கத்தின் நிலைப்பாடு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

37/2022

கௌரவ புத்திக பத்திரண,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கெரம் விளையாட்டினை மேம்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பணத் தொகையில் அரச பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பணத் தொகையில் பாடசாலையை விட்டு விலகிய சிறுவர்களின் கெரம் விளையாட்டுத் திறனை மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கெரம் விளையாட்டில் சர்வதேச மட்டத்திலான வெற்றிகளை அடைந்துகொள்ளும் பொருட்டு பாடசாலை விளையாட்டு வீரர்களை நெறிப்படுத்துவதற்கான திட்டங்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தேசிய கெரம் சங்கத்தினதும் அதனுடன் இணைந்துள்ள ஏனைய சங்கங்களினதும் நிர்வாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அரசாங்கம் தொடர்புபடுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதில் எவ்வாறு தொடர்புபடுகின்றது என்பதையும்;

அவர் மேலும், இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

252/2022

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சரும், பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சரும், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) “தாமரைக் கோபுரம்” கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தின் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(v) “தாமரைக் கோபுரத்தை” பொது மக்கள் பார்வையிடுவதற்காக திறக்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) “தாமரைக் கோபுரம்” கருத்திட்டத்தில் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள முதலீடுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி முதலீடுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு மேற்படி கருத்திட்டத்தை எவ்வகையில் பயன்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

572/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விசேட பொருளாதார மத்திய நிலையங்கள் அமைக்கப்படுவதன் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(ii) இன்றளவில், அத்தகைய விசேட பொருளாதார மத்திய நிலையங்களின் வர்த்தகர்களும், அவற்றுக்கு தமது உற்பத்திகளை வழங்கும் விவசாயிகளும் மிகவும் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகி இருப்பதை அறிவாரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், மேற்படி பொருளாதார மத்திய நிலையங்களுக்கு உற்பத்திகளை வழங்கிவரும் விவசாயிகளை வலுவூட்ட எடுக்கப்படவிருக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1025/2022

கௌரவ சாந்த பண்டார,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கூட்டுறவு கிராமிய வங்கி முறைமையின் மூலம் கிராம மக்களுக்கு பாரிய சேவை ஆற்றப்படுவதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) தற்போது இலங்கையில் காணப்படும் கூட்டுறவு கிராமிய வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை யாது;

(ii) கூட்டுறவு கிராமிய வங்கிகளினால் இன்றளவில் அமுல்படுத்தப்படும் கடன் திட்டங்கள் யாவை;

(iii) கூட்டுறவு கிராமிய வங்கி முறைமையில் இன்றளவில் வைப்பிலிடப்பட்டுள்ள மொத்த பணத்தொகை யாது;

(iv) மேற்படி வைப்புப்பணம் மீள்வைப்பிலிடப்பட்டிருப்பது அரச வங்கிகளிலா அல்லது தனியார் வங்கிகளிலா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கூட்டுறவு பொது நிதியத்தில் உள்ள பணத்தொகை யாது;

(ii) அப்பணத்தொகை முதலீடு செய்யப்படும் விதம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1182/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் சேவையாற்றுகின்ற விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கையினர் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(iii) மேற்படி பதவியில் காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அவற்றை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) வட மாகாணத்துக்கு மேற்படி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(vi) வட மாகாணத்துக்கு மேற்படி உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி உத்தியோகத்தர்களுக்கு புதிய சேவை பிரமாணக் குறிப்பு இல்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதனைத் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அதனைத் தயாரிக்கும் திகதி மற்றும் விதம் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் சிலரின் ஓய்வூதியத்தை கணக்கிடுகையில் அவர்கள் விவசாய ஊக்குவிப்பாளர் மற்றும் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களாக சேவையாற்றிய காலப்பகுதி கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) இவர்களுக்கு மேற்படி சேவை காலப்பகுதி எவ்வாறு எத் திகதியில் வழங்கப்படுமென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1194/2022

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹொரண, வகவத்த பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட டயர் தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டத்திற்காக வழங்கப்பட்ட காணிகளின் விஸ்தீரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி காணிகள் வழங்கப்படும்போது அறவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) அக்காணிகளுக்கான உரித்தினைக் கொண்டிருந்த தரப்பின் பெயர் யாதென்பதையும்;

(iv) மேற்படி தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்காக குறிப்பிட்ட காணிகள் சாட்டடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1315/2022

கௌரவ மொஹமட் முஸம்மில்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட சென்ரல் இன்வெஸ்ட்மன்ட் அன்ட் பைனான்ஸ் (Central Investment and Finance PLC - CIFL) எனும் பெயரிலான நிதி நிறுவனமொன்றுக்கு வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கி அனுமதி வழங்கியிருந்ததா;

(ii) மேற்படி நிறுவனம் அதன் வைப்பாளர்களின் பணத்தை அவர்களுக்கு மீள்செலுத்தவில்லை என்பதை அறிவாரா;

(iii) மேற்படி நிறுவனம் கடனிறுக்க வகையின்மைக்கு உள்ளாகியமை தொடர்பில் இலங்கை மத்திய வங்கி விசாரணை மேற்கொண்டுள்ளதா;

(iv) மேற்படி விசாரணை அறிக்கையின் விதப்புரைகள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(v) மேற்படி வைப்பாளர்களின் பணத்தை மீள் செலுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1472/2022

கௌரவ ரோஹண பண்டார,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் 2021 ஆம் ஆண்டின் சிறுபோகத்தின்போது நெற் செய்கை மேற்கொள்ளப்பட்ட வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(ii) அவற்றுள் சேதனப் பசளை பயன்படுத்தப்பட்டு நெற் செய்கை மேற்கொள்ளப்பட்ட வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iii) சேதனப் பசளையைப் பயன்படுத்தி நெற் செய்கையை மேற்கொண்ட விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானியங்கள் யாவையென்பதையும்;

(iv) அநுராதபுரம் மாவட்டத்தில் சேதனப் பசளை மூலம் மேற்கொள்ளப்படும் நெற் செய்கையை பிரபல்யப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1731/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தனியார் துறையில் சேவையாற்றும் ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதை 60 ஆக உயர்த்த தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு ஏதுவான காரணிகள் யாவை என்பதையும்;

(iii) ஓய்வு பெறும் வயது 60 ஆக உயர்த்தப்படுவதன் காரணமாக 55 வயது பூர்த்தியடையும்போது, ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வதற்கான உரித்து இழக்கப்படுகின்றது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பில் அமைச்சினால் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2022 மார்ச் 11, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

9/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பத்திரிகைப் பேரவைச் சட்டத்தைத் திருத்துவதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளதா என்பதையும்;

(ii) ஊடகத் துறையைச் சேர்ந்த ஏற்புடைய தரப்புகளுடன் இந்த விடயம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இலங்கை பத்திரிகைப் பேரவைச் சட்டத்தைத் திருத்துவது தொடர்பான அரசாங்கத்தின் அடுத்தகட்ட வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

38/2022

கௌரவ புத்திக பத்திறண,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பிரம்பு உற்பத்தி கைத்தொழிலாளர்கள் இன்றளவில் அக்கைத்தொழிலை விட்டு ஒதுங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதையும்;

(ii) மேற்படி கைத்தொழிலாளர்களுக்கு மூலப்பொருட்களை பெற்றுக் கொள்வதிலும் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதிலும் பிரச்சினைகள் காணப்படுகின்றதென்பதையும்;

(iii) மேற்படி கைத்தொழிலின் மூலம் பெருமளவு அந்நியச் செலாவணியை ஈட்ட முடியுமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கையின் பிரம்பு உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், 2015 ஆம் ஆண்டில் அதன் மூலம் ஈட்டப்பட்ட வெளிநாட்டு வருமானம் யாதென்பதையும்;

(iii) இலங்கையின் பிரம்பு உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படாத பட்சத்தில் அவற்றை ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அது எப்போது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கையில் பிரம்பு உற்பத்திகளுக்கென சந்தையை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

253/2022

கௌரவ ஹேஷா விதானகே,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையின் முட்டை உற்பத்தியின் அளவு ஒவ்வொரு ஆண்டிலும் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியினுள் முட்டை ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பின், அது தொடர்பான விபரங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்குறித்த காலப்பகுதியினுள் முட்டை இறக்குமதி செய்யப்பட்டிருப்பின், அது தொடர்பான விபரங்கள் யாவையென்பதையும்;

(iv) இலங்கையின் முட்டை உற்பத்தியை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

573/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கோழிக் குஞ்சுகளைப் பெறுவதற்காக 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள தாய்க்கோழிகளின் எண்ணிக்கை;

(ii) அத்தகைய தாய்க்கோழிகளை இறக்குமதி செய்வதற்கென செலவிடப்பட்டுள்ள தொகை;

ஒவ்வோர் ஆண்டு வாரியாக தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தாய்க்கோழிகளை இறக்குமதிசெய்தல் தொடர்பாக ஏதேனும் மட்டுப்பாட்டை விதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதில் தாக்கம் செலுத்திய காரணிகள் யாவை என்பதையும்;

(iii) அத்தகைய மட்டுப்பாடானது, நாட்டில் முட்டை விலையிலும் கோழி இறைச்சி விலையிலும் ஏற்படுத்தும் தாக்கம் யாது என்பதையும்;

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1026/2022

கௌரவ சாந்த பண்டார,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) உள்நாட்டு கைத்தொழிலாளர்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நோக்கத்துடன் வரையறுக்கப்பட்ட லங்கா சலுசல நிறுவனம் தாபிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்தின் நிர்வாக கட்டமைப்பு யாதென்பதையும்;

(ii) 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் இந்நிறுவனத்தினால் உள்நாட்டு கைத்தொழிலாளர்களின் உற்பத்திகளை கொள்வனவு செய்வதற்கென செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(iii) 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் இந்நிறுவனம் ஈட்டிய இலாபம் ஆண்டு வாரியாக தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) வரையறுக்கப்பட்ட லங்கா சலுசல நிறுவனம் தாபிக்கப்பட்டமைக்கான நோக்கம் நிறைவேறியுள்ளதா என்பதையும்;

(ii) இந்த அடிப்படை நோக்கத்தினை நிறைவேற்றிக்கொள்வதற்கும் இந்நிறுவனத்தை இன்றைய காலத்திற்குப் பொருந்தக்கூடிய வகையில் நவீனமயப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1185/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட ஹேவாகம் கோரளை ஹங்வெல்ல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பாரிய நிதி மோசடி இடம்பெற்றுள்ளது என்பதையும்;

(ii) பிரதேசத்தின் விஹாரைகள் மற்றும் பொது மக்களின் நிதி மேற்படி கூட்டுறவுச் சங்கத்துடன் இணைந்த கிராமிய வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) மேற்படி வைப்பாளர்களுக்கு எந்தவொரு நிதியையும் மீளப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி சங்கத்தினால் மோசடி செய்யப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) தமது நிதியைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ள வைப்பாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி மோசடி எவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை விளக்க முடியுமா என்பதையும்;

(iv) மேற்படி மோசடிக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் இனங்காணப் பட்டிருப்பின் அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இந்த நிதி மோசடிக்கு மேற்படி சங்கத்தின் அப்போதைய பணிப்பாளர் சபை, கூட்டுறவுத் திணைக்கள அலுவலர்கள் மற்றும் தனியார் கம்பனியொன்று பொறுப்புக்கூற வேண்டும் என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பின் அவை யாவை என்பதையும்;

(iii) அவர்களிடமிருந்து நிதியை அறவிட்டு வைப்பாளர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1195/2022

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹொரண, வகவத்த பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட டயர் தொழிற்சாலையை நிர்மாணிக்கும் கருத்திட்டத்திற்கு முதலீடு செய்யப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அதற்கான உடன்படிக்கை, இலங்கை முதலீட்டுச் சபையுடன் கைச்சாத்திடப்பட்ட திகதி யாது என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் தொழில்வாய்ப்புக்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1316/2022

கௌரவ மொஹமட் முஸம்மில்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்திற்கு இதுவரை செலவிடப்பட்டுள்ள தொகை யாதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு மேலும் செலவிட வேண்டியுள்ள தொகை யாதென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் கம்பனி யாதென்பதையும்;

(iv) கடந்த ஆட்சிக் காலத்தில் மேற்படி கருத்திட்டம் தொடர்பில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1473/2022

கௌரவ ரோஹண பண்டார,— பிரதம அமைச்சரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் – அத்துலுநுவரவில் வசிக்கும் ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவர்களுக்கு இதுவரையில் சட்டரீதியான வசிப்பிடம் வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி ஆட்களுக்கு சட்டரீதியான வசிப்பிடத்தை வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1732/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில் இதுவரை பதிவாகியுள்ள சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி சிறுநீரக நோயாளர்களில், சிறுநீரக நோயாளர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படுகின்ற நோயாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி கொடுப்பனவைப் பெறுவதற்காக காத்திருப்போர் பட்டியலிலுள்ள நோயாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) காத்திருப்போர் பட்டியலிலுள்ள சிறுநீரக நோயாளர்களுக்கு மேற்படி கொடுப்பனவை துரிதமாக வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?